RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்
DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 255 | செப்டம்பர் 19, 2026 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மாணவர்களுக்கு ஊட்டச்சத்து மிகுந்த காலை உணவு: அதிகாரிகளுக்கு முதல்வர் விஜய் அறிவுறுத்தல்

சென்னை: செப்.19–

பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தின் கீழ், மாணாக்கர்கள் அனைவருக்கும் சூடான, சுவையான, உரிய அளவிலான, ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்கப்பட வேண்டும் என்றும், இத்திட்டத்துக்கான பணியாற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முதல்வர் விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் தொடர்பான ஆய்வுக்கூட்டம் முதல்வர் விஜய் தலைமையில் தலைமைச் செயலகத்தில் இன்று (செப்.18) நடைபெற்றது.



தமிழகத்தில் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், பசியின்றி மாணவ, மாணவியர்கள் பள்ளிக்கு வருவதை உறுதி செய்து, கல்வியில் முழுமையான கவனம் செலுத்திடவும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல்வர் விஜய் தலைமையில் கடந்த 15.06.2026 அன்று நடைபெற்ற சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தின்போது, காலை உணவுத் திட்டத்தை 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு விரிவாக்கம் செய்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இத்திட்ட விரிவாக்கத்தின் மூலம், 15,454 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8-ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 15.30 லட்சம் மாணவ, மாணவியர்கள், கூடுதலாகப் பயன்பெறுவர். இதற்கென நடப்பு நிதியாண்டில் கூடுதலாக 217 கோடியே 63 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒட்டுமொத்தமாக 724 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 447 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்தாலும், இதர மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள 2,150 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் மூலமாக நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தாலும் காலை உணவு வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளை ஒட்டியுள்ள பேரூராட்சிப் பகுதிகளில் உள்ள 12,857 அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமாக சுய உதவிக் குழு உறுப்பினர்களால் அந்தந்தப் பள்ளியிலேயே காலை உணவு தயாரித்து வழங்கப்படும்.

மாணவர்களின் உடல் நலம், ஊட்டச்சத்து, பள்ளி வருகை, கற்றல் ஆகிய அம்சங்களை ஒருங்கிணைத்து, பள்ளிக் கல்வியின் அடித்தளத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்படுகிறது. இதனை முதல்வர் விஜய் வரும் 22-ம் தேதி சென்னையில் தொடங்கி வைக்கவுள்ளார்.

தொடக்கப்பள்ளி மாணவர்களைத் தொடர்ந்து நடுநிலைப் பள்ளி மாணவர்களையும் உள்ளடக்கும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்ட விரிவாக்கம், மாணவர்களின் கல்விப் பயணத்திற்கும், சமூக முன்னேற்றத்திற்கும் பெரும் துணையாக அமையும்.

இக்கூட்டத்தில் முதல்வர் விஜய், பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டத்தை செயல்படுத்திடும் சமையல் கூடங்கள் மற்றும் உணவு பரிமாறும் இடங்கள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

மேலும், மாணாக்கர்கள் அனைவருக்கும் சூடான, சுவையான, உரிய அளவிலான, ஊட்டச்சத்து மிகுந்த உணவு வழங்கப்பட வேண்டுமென்றும், இத்திட்டத்தில் பணியாற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைந்து செவ்வனே செய்திட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் ந. ஆனந்த், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் ராஜ்மோகன், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கு. ஜெகதீஸ்வரி, தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் மரிய வில்சன் மீதான வழக்கை விசாரிக்க விதிக்கப்பட்ட தடை செப். 25 வரை நீட்டிப்பு

புதுச்சேரி: செப்.19–

தமிழக அமைச்சர் மரிய வில்சன் மீதான வழக்கை விசாரிக்க விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை வரும் செப்.25ம் தேதி வரை நீட்டித்து புதுச்சேரி தலைமை நீதிபதி ஆனந்த் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக நிதியமைச்சர் மரிய வில்சன், கடந்த 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் 8-ம் தேதி புதுச்சேரி, எழில் நகரில் வசித்து வரும் அவரது சகோதரர் மரிய குளோத் வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று மரிய குளோத், அவரது மனைவி கெரோலின் ஆகியோரை தாக்கியதாக லாஸ் பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்திருந்தனர்.



புதுச்சேரி ஜே.எம். 1 நீதிமன்றத்தில் இவ்வழக்கு குறித்த விசாரணை நடைபெற்று வந்தது. வழக்கை விசாரித்து வந்த மாஜிஸ்திரேட் சேரலாதன், புதுச்சேரி பிராந்தியமான மாஹே மாவட்ட முன்சீப் மற்றும் ஜூடிசியல் மேஜிஸ்திரேட் ஆக மாற்றப்பட்டார். இதனால் ஜேஎம் 1 நீதிமன்ற வழக்கை ஜேஎம் 2 நீதிபதி சந்திரசேகர் விசாரித்து வருகிறார். இவர், இவ்வழக்கை வரும் 21ம் தேதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

இந்நிலையில், இந்த வழக்கை ஜேஎம் 2 நீதிமன்றம் விசாரிக்க எதிர்ப்பு தெரிவித்து அமைச்சர் மரிய வில்சன் தரப்பில் புதுச்சேரி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், ஜேஎம் 1 நீதிமன்றமானது மக்கள் பிரதிநிதிகள் மீதான வழக்குகளை விசாரிக்க முடியும். வேறு நீதிமன்றங்களில் நடத்த முடியாது அதனால் இங்கு நடத்தக் கூடாது என்று குறிப்பிட்டிருந்தது.

இந்த மனுவை கடந்த செப்.11ம் தேதி விசாரித்த தலைமை நீதிபதி ஆனந்த், வழக்கை செப்.18 (நேற்று) வரை விசாரிக்க இடைக்காலத் தடை விதித்து உத்தவிட்டிருந்தார். இந்த வழக்கு இன்று தலைமை நீதிபதி ஆனந்த் முன்பாக மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அமைச்சர் மரிய வில்சன் மீதான வழக்கை விசாரிக்க விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை வரும் செப்.25ம் தேதி வரை நீட்டித்து நீதிபதி உத்தரவிட்டார்.

அப்போது, அமைச்சரின் சகோதரர் மரிய குளோத் தரப்பு வழக்கறிஞர் பிரவீண், இடைக்காலத் தடை உத்தரவின் சாராம்சம் தெரிய வேண்டும் என்பதால் மனு நகல் கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி மனுவின் நகலை வழங்க உத்தரவிட்டார்.

## பெரம்பலூர் அருகே உணவில் பூச்சி இருந்ததாக புகார் - பிரியாணி கடைக்கு சீல் வைத்த அதிகாரிகள்

பெரம்பலூர்: செப்.19–

பிரியாணியில் வண்டு, ஐஸ்கிரிமில் ஈ கிடந்ததாக புகார் எழுந்த உணவகத்தில் ஆய்வு மேற்கொண்ட உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள், கடையின் உரிமத்தை ரத்து செய்துள்ளனர். இதையடுத்து கடைக்கு சீல் வைக்கப்பட்டது.



சென்னை கொளத்தூர் தெற்கு மாட தெரு பகுதியை சேர்ந்தவர் மாலிக் பாட்ஷா (27). இவர், கடந்த 13ம் தேதி குடும்பத்துடன் சென்னையிலிருந்து திருச்சிக்கு காரில் சென்றுள்ளார். காலை 11.10 மணியளவில் பெரம்பலூர் மாவட்டம் திருமாந்துறை டோல்கேட் அருகில் சம்சுதீன் என்பவருக்கு சொந்தமான பிரியாணி கடையில் குடும்பத்துடன் பிரியாணி சாப்பிட்டுள்ளார்.

அப்போது, பிரியாணியில் வண்டு இறந்து கிடந்துள்ளதாக கூறப்படுகிறது. இதுகுறித்து, மாலிக் பாட்ஷா கடை மேலாளரிடம் கூறியுள்ளார். அப்போது, முறையாக பதிலளிக்கவில்லை என தெரிகிறது. பின்னர், அதே கடையில் ஐஸ்கிரீமும் வாங்கியுள்ளார். அதில், ஈ இறந்து கிடந்துள்ளது. பிரியாணியில் வண்டு இறந்து கிடந்ததையும், ஐஸ்கிரிமில் ஈ கிடந்ததையும் வீடியோ பதிவு செய்துள்ளார்.

அப்போது, கடை ஊழியர்கள் மாலிக் பாட்ஷாவிடம் வீடியோ பதிவை அழிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர். இதைத்தொடர்ந்து, மாலிக் பாட்ஷா மங்கலமேடு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து, மங்கலமேடு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும், மாலிக் பாட்ஷா பெரம்பலூர் மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை அலுவலகத்தில் புகாரும் கொடுத்துள்ளார். இது மாவட்ட ஆட்சியர் அப்துல் ராசிக்கின் கவனத்துக்கும் சென்றுள்ளது. இதையடுத்து, உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி நேற்று மாலை சம்பந்தப்பட்ட பிரியாணி கடையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உணவு தயாரிப்பு, சேமிப்பு, பராமரிப்பு, சுகாதார நடைமுறைகள், உணவு கையாளும் முறைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து உணவு பாதுகாப்புத்துறை அலுவலர்கள் ஆய்வு செய்தனர். அதில் விதிமுறைகள் மீறப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து உணவு பாதுகாப்புத் துறை சார்பில் பிரியாணி கடையின் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறைபாடுகளை சரி செய்து, உணவு பாதுகாப்பு மற்றும் சுகாதார தரநிலைகளை பூர்த்தி செய்து, தகுதி அலுவலரிடம் அனுமதி பெற்ற பின் பிரியாணி கடைக்கு உரிமம் வழங்கப்படும் என்று அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளனர். உரிமம் ரத்து செய்யப்பட்டதையடுத்து பிரியாணி கடைக்கு சீல் வைக்கப்பட்டது.

## மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு தடை விதிக்க முடியாது: ஐகோர்ட்

சென்னை: செப்.19–

'ஊழல் வழக்கில் கைதான நிலையில் அனுதாபம் தேட முயற்சிப்பதா?' என டாஸ்மாக் வழக்கில் மூலனூர் கார்த்திக் ஜாமீன் கோரிய மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் காட்டமாக கேள்வி எழுப்பியுள்ளது.

டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமங்கள் வழங்கியது, மதுபானங்களை கடைகளுக்குக் கொண்டுச் செல்ல போக்குவரத்து ஒப்பந்தப் புள்ளி வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளதாக, திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி



உள்ளிட்ட 7 பேர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள கார்த்திக் என்பவர் ஜாமீன் கோரி இரண்டாவது முறையாக சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் தரப்பில், "மனுதாரரை ஏற்கெனவே 4 நாள்கள் காவலில் எடுத்து போலீஸார் விசாரணை நடத்தினர். ஆனால், எதுவும் பறிமுதல் செய்யவில்லை. எனவே ஜாமீன் வழங்க வேண்டும்" என வாதிடப்பட்டது.

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "பேரம் பேசி எம்எல்ஏ-வை விலைக்கு வாங்க முயற்சித்த வழக்கில் மனுதாரர் சிறையில் இருந்து வருகிறார். ஊழல் வழக்கில் கைதான நிலையில் அனுதாபம் தேட முயற்சிப்பதா?" என கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து, இந்த மனுவுக்கு பதிலளிக்க கால அவகாசம் வேண்டும் என காவல் துறை தரப்பில் கேட்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி, காவல் துறை தரப்பில் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை செப்.25-ம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

முன்னதாக கார்த்திக் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனுவை நீதிபதி வி.லட்சுமிநாராயணன் கடந்த ஆக.28-ம் தேதி தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## வார விடுமுறை நாட்களை முன்னிட்டு 2,655 சிறப்பு பேருந்துகள் இன்று முதல் இயக்கம்

சென்னை: செப்.19–

வார விடுமுறையை முன்னிட்டு 2,655 சிறப்பு பேருந்துகள் இன்று முதல் இயக்கப்படும் என அரசு விரைவுப் போக்குவரத்து கழகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கை: வார விடுமுறை நாட்களையொட்டி சென்னையிலிருந்து பிற இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் பல்வேறு நகரங்களுக்கும் கூடுதல் பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை கருத்தில்கொண்டு தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகள் இயக்க போக்குவரத்துக் கழகம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி, கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை 760 பேருந்துகளும், நாளை சனிக்கிழமை 520 பேருந்துகளும் இயக்கப்படுகிறது.

சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று 115 பேருந்துகளும், நாளை 115 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது. மாதவரத்திலிருந்து இன்று மற்றும் நாளை கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், வேலூர், ஒசூர், புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு ஒவ்வொரு நாளும் 70 சிறப்பு பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஞாயிறுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் 805 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

இந்நிலையில் வாரவிடுமுறையை முன்னிட்டு சொந்த ஊர் செல்ல இன்று 7,812 பயணிகளும் நாளை 4,001 பயணிகளும் ஞாயிறுக்கிழமை 8,946 பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்த ஓவிய ஆசிரியர் கைது!

திருப்பூர், செப்.19–

மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக ஓவிய ஆசிரியரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாணவிகளுக்கு பாலியல் தொல்லை

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகே உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் கடந்த ஜூன் மாதம் பள்ளி மாணவிகளிடம் ஆசிரியர் தவறாக நடந்து கொண்டதாக புகார் எழுந்தது. இதையடுத்து மாணவிகள் அளித்த புகாரின் பேரில் பள்ளி நிர்வாகம் விசாரணை மேற்கொண்டுள்ளது. மேலும், இதுதொடர்பாக மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

போக்சோவில் கைது

இதனைத் தொடர்ந்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்கள் பள்ளிக்கு சென்று, மாணவிகளிடம் தனித்தனியாக விசாரணை நடத்தினர். அப்போது ஓவிய ஆசிரியர் மதன்குமார் மீது பாலியல் குற்றச்சாட்டு எழுந்ததாக தெரிகிறது. இதையடுத்து, பள்ளி தலைமை ஆசிரியர் அளித்த எழுத்துப்பூர்வமான புகாரின் பேரில், உடுமலைப்பேட்டை அனைத்து மகளிர் போலீசார் மதன்குமார் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.

## தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணம் கேட்டு தொந்தரவு செய்பவர்கள் மீது உடனடியாக பொதுமக்கள் புகார் அளிக்கலாம்



தேனி, செப்.19–

'தேனி அரசு மருத்துவக் கல்லூரிமருத்துவமனையில் ஸ்கேன், ரத்தப் பரிசோதனை, அவசர சிகிச்சை, உயர்தர அறுவை சிகிச்சைகள் என அனைத்து வசதிகளும் ஒரே இடத்தில் கிடைப்பதால் நாள்தோறும் ஏராளமானோர் சிகிச்சைக்காக வந்து செல்கின்றனர். இந்நிலையில் நோயாளியைக் கவனிக்கும் ஊழியர்கள் சிகிச்சைப் பெற வருவோரிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக புகார் வரப்பெற்றுள்ளது.

தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் Sumeet என்ற ஒப்பந்த நிறுவனம் மூலம் 3 நபர் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்களின் பெயர்கள் மற்றும் அலைப்பேசி எண்கள் வார்டுகளில் பொதுமக்கள் புகார் அளிப்பதற்கு எதுவாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டாய பண வசூலில் ஈடுபடுவோர் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்புப் பலகைகள் மருத்துவமனையில் பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே, சிகிச்சைப் பெற வருவோரிடம் பணம் கேட்டு தொந்தரவு செய்பவர்கள் மீது உடனடியாக பொதுமக்கள் புகார் அளிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.



## 'ரேஷன் அரிசியை மாத்துங்க' ஆய்வில் கலெக்டர் அதிரடி

கிருஷ்ணகிரி, செப்.19–

போச்சம்பள்ளி அருகே, ரேஷன் கடையில் ஆய்வு மேற்கொண்ட கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார், பழுப்பு நிற அரி சியை உடனே மாற்ற உத்தர விட்டார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், போச் சம்பள்ளி வட்டத்தில், 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டத்தில், பாரூர் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையம், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கீழ் குப்பம் கூட்டுறவு ரேஷன் கடை, அரசு நடுநிலைப்பள்ளி, போச்சம் பள்ளி அரசு மருத்துவமனை மற்றும் முதன்மை பதப்படுத்தும் நிலையம் உள்ளிட்டவற்றில், கலெக்டர் தினேஷ்குமார் நேற்று முன்தினம் ஆய்வு செய்தார். மாவட்ட

அப்போது, பல்வேறு ஆலோ சனைகள் மற்றும் வழிகாட்டுதல் களை வழங்கிய அவர், கீழ்குப்பம் பகுதி ரேஷன் கடையில் இருந்த அரிசியை திருப்பி அனுப்பி,மாற்று அரிசியை பெற்றுக்கொள்ள கூறினார். ஆதரவின்றி சாலையில் திரிந்த, 3 முதியவர்களை மருத்துவ சிகிச்சைக்கு பின், காப்பகத்தில் சேர்க்க உத்தரவிட்டார்.

இது குறித்து, மாவட்ட கலெக் டர் தினேஷ்குமார் கூறியதாவது:

போச்சம்பள்ளி அருகே, கீழ் குப்பம் பள்ளியில் சமைத்த, தக்காளி சாதத்தில், அரிசி சரியாக , வேகாமல் இருந்தது. மேலும், 10 ! நிமிடம் வெந்திருந்தால், நன்றாக இருந்திருக்கும். ரேஷன் கடையில் ஆய்வு செய்தபோது, பழுப்பு நிறத் திலான அரிசி கலந்திருந்தது. அதை விட தரமான அரிசி நம்மிடம் கையிருப்பில் உள்ளதால், அரிசியை திருப்பி அனுப்பி, புதிய அரிசியை வாங்க கூறினேன். மேலும், ஆதரவற்ற நிலையில், புளியம்பட்டி பஞ்.,க்கு உட்பட்ட வடமலம்பட்டி பஸ் ஸ்டாப்பில் தங்கியிருந்த, 3 முதியவர்களை மருத்துவ சிகிச்சைக்கு பின், காப்பகத்தில் சேர்க்க கூறினேன். இவ்வாறு, அவர் கூறினார்.




■ சென்னை கூடுவாஞ்சேரி, ஜிஎஸ்டி ரோடு, நந்திவரத்தில் எம் சி காம்ப்ளக்ஸ் மாபெரும் திறப்பு விழா நடைபெற்றது. கட்டிட உரிமையாளர் எல். மாயன், சந்திரா மாயன் கடையை திறந்து குத்துவிளக்கு ஏற்றினார். வருகை தந்த அனைவரையும் தீனதயாளன், தனலட்சுமி தீனதயாளன், அரவிந்தன், ரக்ஷனா, மோகனசுந்தரம் , பெருந்தேவி மோகனசுந்தரம் , ஸிவானி, ஜோஷிகா, ஆகியோர் வரவேற்றனர்.

## கள்ளிமந்தயத்தில் தமிழக வெற்றி கழக தொப்பம்பட்டி ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா



திண்டுக்கல், செப்.19–

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே கள்ளிமந்தயம் ஊராட்சியில் தமிழக வெற்றிக் கழக தொப்பம்பட்டி ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. மேற்கு மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா தலைமையில், தொப்பம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்ராசு மற்றும் JPS சக்தீஷ்குமார் முன்னிலையில் அலுவலகம் திறக்கப்பட்டது. இந்நிகழ்வில். பிரேம் குமார். காளியப்பன். ரமேஷ்.மாவின் மற்றும்மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

புதிய அலுவலகம் திறக்கப்பட்டதை தொடர்ந்து மாவட்டச் செயலாளர் கார்த்திக் ராஜா, விசில் சின்னத்திற்கு வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி தெரிவித்ததுடன், பொதுமக்களின் குறைகளை நேரில் கேட்டறிந்தார். பொதுமக்கள் அலுவலகத்தில்

", எங்க குறையை நேரடியா சொல்ல முடியும், சந்தோஷமா இருக்கு"தளபதி விஜய் அண்ணன் மேல உள்ள நம்பிக்கையில தான் ஓட்டு போட்டோம். கார்த்திக் ராஜா அண்ணன் நேரடியா வந்து குறைகளை கேட்குறாரு, இது தான் மாற்றம்

"எங்க பகுதியில் தண்ணீர் பிரச்சனை, ரோடு பிரச்சனை நிறைய இருக்கு. த.வெ.க அலுவலகம் வந்ததால இனி எங்க பிரச்சனை தீரும்–னு நம்புறோம்"

"விசில் சின்னத்திற்கு வாக்களித்த ஒவ்வொருவருக்கும் தலைவர் விஜய் சார்பாக நன்றி. இது வெறும் அலுவலகம் அல்ல, மக்களின் குறை தீர்க்கும் வீடு. தொப்பம்பட்டி மக்களின் ஒவ்வொரு பிரச்சனையிலும் த.வெ.க துணை நிற்கும்"

மக்களின் எண்ணங்களை கேட்டறிந்த நிர்வாகிகள், விரைவில் அவற்றுக்கு தீர்வு காணப்படும் என உறுதியளித்தனர். இதனால் அப்பகுதி பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ஊத்துக்கோட்டையில் நகைச்சுவை நடிகர் வடிவேலு காமெடி போன்று தாமரைக் குளம் காணாமல் போனதாக மாவட்ட ஆட்சியர் கவிதாவிடம் விடுதலை சிறுத்தைகள் கட்சி பிரமுகர் புகார்



திருவள்ளூர், செப்.19–

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி பேருந்து நிலையம் அருகே சர்வே எண் 498 ல் நீர் நிலைக்கு உட்பட்ட தாமரை குளத்தை, 3 ஏக்கர் 30 சென்ட் நிலத்தை அப்பகுதியைச் சார்ந்த அரசியல் பிரமுகர்கள், மற்றும் வசதி படைத்தவர்களு அரசு அதிகாரிகளின் துணையுடன் அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது, அதனை தொடர்ந்து கிணறு காணாமல் போனதாக திரைப்பட நகைச்சுவை நடிகர் வடிவேலின் நகைச்சுவை போல், தாமரைக் குளம் காணாமல் போனதாக விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் கவிதாவிடம் புகார் மனு அளித்துள்ளனர், பின்னர் செய்தியாளர் சந்திப்பில் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜெபா, தெரிவிக்கையில் கடந்த 2023 ஆண்டின் ஆதிதிராவிடர், பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் மூலம் கடன் பெற்று தொழில் தொடங்குவதற்கு திருவள்ளூர் மாவட்டம் பயனாளியாக தம்மை தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்காக ரூபாய் 17 லட்சத்தின் ஐம்பது ஆயிரம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த பணத்தின் மூலமாக ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு உட்பட்ட தினசரி அங்கன்வாடி கடைகளை பொது ஏலத்தில் எடுக்கப்பட்டதாகவும், அதன் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளாக தன்னுடைய வாழ்வாதாரத்தை நடத்தி வந்துள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார், இந்நிலையில் தற்போது பேரூராட்சி நிர்வாகம் சார்பில் பேருந்து நிலையத்தில் உள்ள சிதலமடைந்த பழைய வணிக வளாகங்களை இடித்துவிட்டு 50க்கும் மேற்பட்ட புதிய வணிக வளாகங்கள் கட்டுவதற்கான திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அதற்காக தரமாக உள்ள கட்டிடங்களை பேரூராட்சி நிர்வாகம் இடிப்பதாக குற்றம் சாற்றி உள்ளார்.

எனவே மாவட்ட ஆட்சியர் வணிக வளாகங்களை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு பின்னரே அதனை இடிப்பதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனவும், நீர்நிலை பகுதிகளை ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் எனவும்,பேருந்து நிலையம் அருகே உள்ள காணாமல் போன தாமரைக் குளத்தை கண்டுபிடித்து தர வேண்டும் என விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஜெபா, தலைமையில்

புகார் மனு அளித்துள்ளனர் இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட பொருளாளர் கயடை அறிவுச்செல்வன், மாநில அச்சுஊடக துணை செயலாளர் பாக்ஸர் மணி, எல்லாபுரம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் தளபதி அருள், இளைஞரணி செயலாளர் காக்கை முருகேஷ், மற்றும் திமுக ஒன்றிய பிரதிநிதி மோகன் பாபு, உட்பட சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரியில் 'வெள்ளி வட்ட' கவியரங்கம்

தேவகோட்டை, செப்.19–

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி தமிழ்த்துறை சார்பில், மாணவர்களின் பல்கலைத் திறனை மேம்படுத்தும் வகையில் 'வெள்ளி வட்டம் தேதிகள் சொல்லும் சேதிகள்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது.

கல்லூரியின் அண்ணாமலை லெட்சுமணன் கலையரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கண்ணதாசன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். மாணவர்கள் தங்களது திறமைகளையும் தலைமைப் பண்பையும் வளர்த்துக் கொள்ள இதுபோன்ற மேடைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், கவிதையின் உணர்வை உணர்ந்து அதனுடன் பயணிப்பது வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் என்றும் அவர் பேசினார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற வனத்துறை விரிவுரையாளரும் கவிஞருமான அரவரசன் கலந்து கொண்டு கவியரங்கத்திற்குத் தலைமை வகித்தார்.

தமிழ்த்துறை இளங்கலை மூன்றாம் ஆண்டு மாணவி ஜெயஸ்ரீ, இரண்டாம் ஆண்டு மாணவிகள் அர்ச்சயா, ஜாய் ஸ்ரீ, சகாய ரென்சி, முதலாம் ஆண்டு மாணவிகள் தமிழரசி, யாழினி ஆகியோர் அன்னையர் தினம், தந்தையர் தினம், ஆசிரியர் தினம், மகளிர் தினம், சுதந்திர தினம் மற்றும் குழந்தைகள் தினம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு கவிதைகளைப் படைத்துப் பாடினர்.

முன்னதாக தமிழ்த்துறை பேராசிரியரும் வெள்ளி வட்ட ஒருங்கிணைப்பாளருமான இளங்கோ வரவேற்றார். நிறைவில் தமிழ்த்துறை பேராசிரியரும் ஒருங்கிணைப்பாளருமான தவமணி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் முனைவர் பட்ட ஆய்வாளர்கள், இளங்கலை மாணவர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் நகரப் பிரமுகர்கள் ஜெகநாதன், வழக்கறிஞர் மணி பாரதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் 26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா

கிருஷ்ணகிரி, செப்.19–

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தாம்சன் பேட்டையில் 26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா இன்று கோலாகலமாக நடைபெற்றது.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, 10 அடியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகருக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு, சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன. வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட விநாயகர் சிலை பக்தர்களை வெகுவாக கவரும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

நான்காம் நாளான இன்று மாலை காவேரிப்பட்டினம் ஸ்ரீ பூங்காவனத்தம்மன் சேவா சமிதி ஆலய கமிட்டியினர் சிறப்பு பஜனை பக்தி பாடல்களை பாடினர். அப்பகுதியைச் சேர்ந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விநாயகரை தரிசனம் செய்து வழிபட்டனர். விழாவையொட்டி பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அன்னதான நிகழ்ச்சியில் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தி அனைத்து சமுதாயத்தினரும் பிரசாதம் மற்றும் அன்னதானத்தை வாங்கிச் சென்றனர்.

தொடர்ந்து சிறப்பு பூஜைகள், வழிபாடுகள் மற்றும் பல்வேறு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் அப்பகுதி பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

26ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்பெஷல் பாய்ஸ் குழுமத்தினர், மற்றும் குடும்பத்தினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு



நீலகிரி, செப்.19–

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடினமாலா, அரக்கோடு, தேனாடு, நெடுகுளா மற்றும் கோடநாடு ஆகிய ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணரு நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி, நீலகிரி மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, மாவட்ட ஆட்சித்தலைவர் , கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட கேர்பெட்டா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கப்படுவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அதனை தொடர்ந்து, கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் கடினமாலா ஊராட்சி கொப்பையூர் பகுதியில், பிரதான் மந்திரி ஜென்மம் திட்டத்தின் கீழ் தலா ரூ.5.73 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 13 எண்ணிக்கையிலான தொகுப்பு வீடுகளையும், கடினமாலா ஊராட்சி கோழி குட்டை பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ.52.63 இலட்சம் மதிப்பீட்டில் அத்தியூர் மட்டம் முதல் கொப்பையூர் வரை நடைபெற்று வரும் தடுப்புச் சுவர் அமைக்கும் பணியினையும், கடினமாலா ஊராட்சி கோழிகுட்டை பகுதியில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் அத்தியூர் மட்டம் முதல் கொப்பையூர் வரை நடைபெற்று வரும் சாலை அமைக்கும் பணியினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், கோத்தி முக்கு பகுதியில் அமைந்துள்ள கடினமாலா ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், கோத்தி முக்கு பகுதி நியாய விலைக் கடையில் பொருட்களின் இருப்பு மற்றும் தரம் குறித்தும், கோத்தி முக்கு பகுதி அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் வருகை, எடை, உயரம் குறித்தும், அதே பகுதியில் செயல்படும் கிளை நூலகத்தில் உள்ள பதிவேடுகள், புத்தகங்கள் மற்றும் வாசகர்களின் எண்ணிக்கை குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், அரக்கோடு ஊராட்சிக்குட்பட்ட கரிக்கையூர் பழங்குடியினர் அரசு உண்டு உறைவிட உயர்நிலைபள்ளியில், தந்தை பெரியார் பிறந்த நாள் சமூக நீதி நாள் உறுதி மொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

இந்த ஆய்வின் போது, கோத்தகிரி வட்டார வளர்ச்சி அலுவலர் சிவக்குமார், கோத்தகிரி வட்டாட்சியர் மகேந்திரகுமார் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# குன்னூரில் இல்லம் தேடி இலவச மருத்துவ முகாம்

நீலகிரி, செப்.19–

குன்னூர் இந்திய ரெட் கிராஸ் சங்கத்தின் சார்பில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இல்லம் தேடி இலவச மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. குன்னூரில் இந்தியன் ரெட் கிராஸ் சார்பில் இல்லம் தேடி இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது இதில் அனைவருக்கும் இலவசமாக மருத்துவ பரிசோதனை. இலவசமாக மருந்துகள். இலவசமாக ரத்த பரிசோதனை. உயர் ரத்த அழுத்த பரிசோதனை போன்ற பல்வேறு பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டு பரிசோதனை செய்தவர்களுக்கு இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டன. இதில் இந்திய ரெட் கிராஸ் சங்கத்தின் செயலாளர் டாக்டர் பிரபு குமார். பொதுச் செயலாளர் மோரிஸ். கொலுசு மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# ஓம் ஸ்ரீ சர்வ மங்கள அங்காள பரமேஸ்வரி ஆலய புணராவர்த்தன ஜிர்னோர்தாரண அஷ்டவந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா



சென்னை, செப்.19–

சென்னை வானகரம் கந்தமாபுரத்தில் அமைந்துள்ள ஓம் ஸ்ரீ சர்வ மங்கள அங்காள பரமேஸ்வரி ஆலய புணராவர்த்தன ஜிர்னோர்தாரண அஷ்டவந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா நடைபெற்றது. லோகமாயா மங்கள ரூபினியாய் சிங்கத்தின் மீது சிங்கார ரூபம் கொண்டு சிவலிங்கம் தன்னை இடையிலே தாங்கி பரணி எல்லாம் உய்வுற எல்லா ஜீவராசிகளுக்கும் தாயான எல்லா சக்திகளுக்கும் முதன்மையாய் விளங்கும் ஆதிசக்தி ஓம் ஸ்ரீ சர்வ மங்கள அங்காள பரமேஸ்வரி எனும் திருநாமம் கொண்டு அம்மனுக்கு நிகழும் மங்களகரமான பராபக வருடம் திக்ஷிணாயனம் ஆவணி மாதம் 31 ஆம் தேதி சஷ்டி திதி அனுஷ நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப நன்னாளில் பன்னிரு திருமுறைகள் நான்கு வேதங்கள் சிவ ஆகமம் தேவார விசேஷ உபச்சாரங்களுடன் நான்கு கால யாகசாலை பூஜைகளுடன் பஞ்சாகீனி குண்ட வேள்வி பூஜைகளும் சீரும் சிறப்புமாக சென்னை முகலிவாக்கம் ஓம் ஸ்ரீ ஆதி குரு திருமூலர் சித்தர் பீட ஸ்ரீமத் ராஜேந்திர சிவம் பரமானந்த சுவாமிகள் அவர்கள் யாகசாலையை முழு பொறுப்பேற்று மஹா கும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்தார். ஆலய நிர்வாகத்தினர். ஜி. மாரிமுத்து நாயக்கர், மாரிமுத்து சுலோச்சனா, சுரேஷ் குடும்பத்தினர் இணைந்து கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நடத்தினர்.

# தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து நியாய விலைக்கடைகளிலும் இன்று சிறப்பு முகாம்




தேனி, செப்.19–

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013-இன் படி, பொது விநியோகத் திட்டத்தின் கீழ், அத்தியாவசியப் பொருட்கள் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதிசெய்யும் பொருட்டு, முன்னுரிமை குடும்ப அட்டை (PHH), மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா (AAY) குடும்ப அட்டை வைத்துள்ள குடும்ப அட்டைதாரர்களின் குடும்ப அட்டையில் உள்ள அனைத்து நபர்களின் ஆதார் விபரங்களை சரிபார்ப்பதற்காக, கைவிரல் ரேகை/கருவிழி பதிவின் மூலம் உறுதி செய்யும் (e-KYC) பணி நடைபெற்று வருகிறது. எனவே, மேற்படி e-KYC பணியினை 100% நிறைவு செய்யும் பொருட்டு 19.09.2026 அன்று தேனி மாவட்டத்திலுள்ள அனைத்து நியாய விலைக்கடைகளிலும் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. இதனையொட்டி, நமது மாவட்டத்தில் இதுவரை கைரேகை பதிவு செய்யாத அனைத்து குடும்ப அட்டை தாரர்களும் இம்முகாமினை பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.

# ARAN’26 -30-வது மாநில அளவிலான ஊர்க்காவல் படையினர் தொழில்முறை விளையாட்டு போட்டிகள்

## தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தொடக்கம்




தேனி, செப்.19–

தேனி மாவட்டம் மாநில அளவிலான ஊர்க்காவல் படையினர் விளையாட்டு போட்டி ஆண்டுதோறும் நடைபெற்று வருவதை தொடர்ந்து இந்த ஆண்டு திண்டுக்கல் சரக ஊர்க்காவல் படையினர் சார்பாக ARAN’ 26 - 30-வது விளையாட்டு போட்டி தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராக கலந்து கொண்ட தென் மண்டல காவல்துறை தலைவர்.விஜயேந்திர பிடாரி, ஊர்க்காவல் படை துணை தளபதி & குடிமை பாதுகாப்பு காவல்துறை தலைவர்.V.ஜெயஸ்ரீ, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் Dr.R.வைத்தியநாதன், தேசிய கொடி ஏற்றி மற்றும் விளையாட்டுப் போட்டிக்கான கொடியினை ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தனர். இந்நிகழ்வில் தேனி மாவட்ட காவல்கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், விளையாட்டு ஜோதியை ஏற்றி வைத்தார். மேலும் நிகழ்ச்சியில் திண்டுக்கல் சரக ஊர்க்காவல் படை அதிகாரிகள், தமிழ்நாட்டில் உள்ள மற்ற சரக ஊர் காவல் படை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சிட்லபாக்கத்தில் 23 ஆயிரம் விநாயகர் சிலைகளுடன் 20ம் ஆண்டு விநாயகர் கண்காட்சியை மேயர் துணை மேயர் பார்வையிட்டனர்



சிட்லபாக்கம், செப்.19–

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த குரோம்பேட்டை, ராதாநகர், கிருஷ்ணமாச்சாரி தெருவை சேர்ந்தவர் சீனிவாசன்.

கட்டிட கலை நிபுணரான இவர் தீவிர விநாயகர் பக்தர்.

இவர் கடந்த 19 ஆண்டுகளுக்கும் மேலாக ஆயிரகணக்கான விநாயகர் சிலைகளை சேகரித்து பொதுமக்களுக்கு இலவசமாக கண்காட்சி நடத்தி வருகிறார்.

இந்நிலையில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தாம்பரம் அடுத்த சிட்லபாக்கம், காந்தி தெருவிலுள்ள ஸ்ரீ லக்ஷ்மி ராம் கணேஷ் மஹாலில் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகளுடன் கூடிய 20ம் ஆண்டு விநாயகர் கண்காட்சி செப்டம்பர் 14ம் தேதி துவங்கி, செப்டம்பர் 24ம் தேதி வரை என 10 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த கண்காட்சியை தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ் பார்வையிட்டார்.

இதுகுறித்து கண்காட்சி அமைப்பாளர் சீனிவாசன் கூறுகையில் :

விநாயகர் சிலைகள் கண்காட்சி செப்டம்பர் 24ம் தேதி வரை 10 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த கண்காட்சி மக்கள் பார்வைக்கு இலவசமாக அனுமதிக்கப்படுகிறது.

காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் 7 மணி வரை பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிடலாம்.

20வது ஆண்டு விநாயகர் சிலைகள் கண்காட்சியில் எல்லா விதமான விநாயகர்களும் வைக்கப்பட்டுள்ளது.

மனிதனின் அன்றாட வாழ்க்கையில் நடைமுறையில் உள்ள அன்றாட சாத்தியமானவைகள் என்னென்ன உள்ளதோ அவை அனைத்தும் செய்துள்ளோம்.

விநாயகர் நடந்து வந்தால் எவ்வாறு இருக்கும், குளித்தால் எவ்வாறு இருக்கும், படுத்து இருந்தால் எவ்வாறு இருக்கும், தாயின் கருவறையில் இருந்தால் எப்படி இருக்கும், சிற்பிக்குள் முத்து இருந்தால் அந்த முத்து பிள்ளையாராக இருந்தால் எப்படி இருக்கும் என்பதை மையமாக வைத்து விநாயகர்கள் வைக்கப்பட்டுள்ளது. டென்னிஸ் விளையாடும் விநாயகர், அருவியில் குளிக்கும் விநாயகர், 10 அடி உயர அரச மர வேர்களால் உருவான பசுமை விநாயகர், அன்ன வாகனத்தில் பறக்கும் விநாயகர், ஏஜ விநாயகர், தேரில் வரும் விநாயகர், அந்தத் தேர் தன்னைத் தானே சுத்தி வந்தால் எவ்வாறு இருக்கும்.

ஒரு விநாயகர் சகல தெய்வங்களின் உருவத்திலும் நவகிரகங்களின் ரூபத்திலும் தட்சணாமூர்த்தி ரூபத்திலும் இருந்தால் எவ்வாறு இருக்கும் அதுபோன்ற வித்தியாசமான விநாயகர்கள் வைக்கப்பட்டுள்ளது.

வீட்டில் உபயோகப்படுத்தக்கூடிய பல்பு, டியூப் லைட், பூச்செண்டு அதில் எல்லாம் விநாயகர் இருந்தால் எவ்வாறு இருக்கும் என்பதை யோசித்து விநாயகர்கள் வைக்கப்பட்டுள்ளன.

ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் மூலமாக நிலாவில் விநாயகர் வருவது போலவும், பல்வேறு கற்பனைகளை கொண்டு விநாயகர்களை உருவாக்கி வித்தியாசமாக அமைத்துள்ளோம்.

சபரிமலை ஐயப்பன் கோவில், கள்ளிக்கோட்டை விநாயகர் கோவில், மலைக்கோட்டை விநாயகர் கோவில் போன்று பல்வேறு மினியேச்சர் விநாயகர் செய்யப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சியை காண வரும் பொது மக்களுக்கு அனுமதி இலவசம் இதில் விநாயகரின் தரிசனம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்.

இதில் வரக்கூடிய பொதுமக்கள் கடமைக்கு கண்காட்சியை காண வரக்கூடாது.

இந்த கண்காட்சியில் பல தத்துரூபங்கள் மனிதனின் அன்றாட வாழ்க்கைகள் அடங்கிய விநாயகர் கண்காட்சியாக இதை அமைத்துள்ளோம்.

வரக்கூடியவர்கள் மிகவும் உன்னிப்பாக இந்த கண்காட்சியை காண வரவேண்டும் என பொதுமக்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்

என தெரிவித்தார்.

இதில் பகுதி கழகச் செயலாளர் சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள் சிட்லபாக்கம் ஜெகன், ராஜா, பிரதாப் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.





# ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயில் கும்பாபிஷேக விழா

சென்னை, செப்.19–

சென்னை செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் அடுத்த காந்தி நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீ வெங்கடேச பெருமாள் திருக்கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. காந்திநகர் கிராமத்தில் கடந்த 39 ஆண்டுகளாக எழுந்தருளி அருள்பாலித்து வரும் கலியுக கண்கண்ட தெய்வமாய் விளங்கும் ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடேச பெருமாள் பஜனை கோயிலாக கிராம பெரியோர்களால் நிர்மாணிக்கப்பட்டு சிறு கோயிலாய் இருந்து வந்த நிலையில் தற்போது கர்பக்ரஹம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், விமானம் உட்பட பெரிய திருக்கோயிலாய் அமைந்து நிகழும் மங்களகரமான ஸ்ரீ பராபவ வருடம் ஆவணி மாதம் 31ஆம் தேதி வியாழக்கிழமை, அனுஷ நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் துலா லக்னத்தில் வைகானஸ ஆகம முறைப்படி பரிவார தெய்வங்களாக ஸ்ரீ யோக நரசிம்மர் சுவாமி, ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவ சுவாமி, ஸ்ரீ தன்வந்திரி சுவாமி பெருமாள் ஆகியோர்களுடன் வெகு விமர்சையாக முதல் கும்பாபிஷேக வைபவமானது சிறப்பாக நடைபெற்றது. ஆலய நிர்வாகத் தலைவர் ஆர். தசரதன், கஸ்தூரி தசரதன் மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தினர் ஆலய விழா குழுவினர் மற்றும் காந்திநகர் கிராமத்தினர் சுவாமிமலை சபதி புகழேந்தி இணைந்து சிறப்பாக கும்பாபிஷேகத்தை நடத்தினர். வருகை தந்த அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஆதரவின்றி பேருந்து நிழற்கூடத்தில் தங்கியிருந்த 3 முதியவர்கள் மீட்பு

## மாவட்ட ஆட்சியர் உத்தரவின்பேரில் மருத்துவ சிகிச்சை முதியோர் காப்பகத்தில் சேர்க்க நடவடிக்கை



கிருஷ்ணகிரி, செப்.19–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆதரவின்றி தவித்து வந்த 3 முதியவர்கள் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் மீட்கப்பட்டு, அவர்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார், “உங்களைத் தேடி உங்கள் ஊரில்” திட்டத்தின் கீழ் போச்சம்பள்ளி வட்டத்தில் பல்வேறு பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, பர்கூர் ஒன்றியம், புளியம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட வடமலம்பட்டி பயணியர் பேருந்து நிழற்கூடத்தில் ஆதரவின்றி 3 முதியவர்கள் தங்கியிருந்தது மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு வந்தது.

இதையடுத்து, முதியவர்களின் நிலையை கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர், அவர்களை உடனடியாக மீட்டு, தேவையான மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் அவர்களை உரிய முதியோர் காப்பகத்தில் பாதுகாப்பாக சேர்க்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார்.

மாவட்ட ஆட்சியரின் அறிவுறுத்தலின்படி, மீட்கப்பட்ட 3 முதியவர்களும் தற்போது கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, தேவையான மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ஆதரவின்றி சாலையோரங்களிலும், பொது இடங்களிலும் தங்கியிருக்கும் முதியவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# உலக ஓசோன் தினத்தில் செங்கல்பட்டு மாவட்டம் கிழக்கு தாம்பரம் ராஜகீழ் பக்கத்தை சேர்ந்த ஐந்து வயது ஐந்து மாதங்களே ஆன சிறுவன் ராப்பலிங்கில் உலக சாதனை




சென்னை, செப்.19–

உலக ஓசோன் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சென்னை மாணவர் ஒருவர் ராப்பலிங் சாகசத்தில் உலக சாதனை படைத்து அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவிற்கு உட்பட்ட மலைப்பட்டு பகுதியில் உள்ள 155 அடி உயர பாறை மலையில் இந்த உலக சாதனை நிகழ்வு நடைபெற்றது. தமிழ்நாடு மலையேற்ற சங்கத்தின் பாறை ஏற்ற மாணவரான மாஸ்டர் யுகன் கார்த்திக், செங்குத்தான பாறையின் உச்சியில் இருந்து பாதுகாப்பு உபகரணங்களுடன் ராப்பலிங் முறையில் வெற்றிகரமாக இறங்கி புதிய உலக சாதனையை படைத்தார்.

உலக ஓசோன் தினமான செப்டம்பர் 16-ஆம் தேதியை முன்னிட்டு நடைபெற்ற இந்த சாதனையை, தனது ஆசிரியர்களுக்கு அர்ப்பணிப்பதாக மாஸ்டர் யுகன் கார்த்திக் தெரிவித்தார். இளம் வயதிலேயே சாகச விளையாட்டுகளில் ஆர்வம் காட்டி வரும் அவர், இந்த சாதனையின் மூலம் மாணவர்களிடையே தன்னம்பிக்கை மற்றும் சாகச உணர்வை ஊக்குவித்துள்ளார்.

இந்த உலக சாதனை முயற்சிக்கான பயிற்சியை, புகழ்பெற்ற மலையேற்ற பயிற்றுநரும் தமிழ்நாடு மலையேற்ற சங்கத்தின் பொதுச் செயலாளருமான ஆர். திருலோகச்சந்திரன் வழங்கியிருந்தார். அவரது வழிகாட்டுதலின் கீழ் பல்வேறு பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இந்த சாதனை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

சாதனையை Noble Book of World Records நடுவர் எஸ்.வி. ரமணா அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்து சான்றிதழ் வழங்கினார். மேலும், Trek Tamil Nadu திட்டத் தலைவர் சந்திரசேகர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உலக சாதனை சான்றிதழை மாஸ்டர் யுகன் கார்த்திக்கிடம் வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியில் மலைப்பட்டு கிராமத் தலைவர் பத்மநாபன், உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மாணவரின் பெற்றோர்களான கருணாநிதி மற்றும் நான்சி ஆகியோரும் இந்த சாதனைக்கு முழு ஆதரவு அளித்ததாக தெரிவிக்கப்பட்டது.

உலக ஓசோன் தினத்தில் நடைபெற்ற இந்த உலக சாதனை, இளைஞர்களிடையே சாகச விளையாட்டுகள் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஒருங்கிணைத்து புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# 50 ஆண்டுகளில் 1.16 கோடி கண் அறுவை சிகிச்சைகள்! வெளியில் விளையாடும் நேரம் குறைவதால் குழந்தைகளுக்கு பார்வைக் குறைபாடு அதிகரிப்பு

## அரவிந்த் கண் மருத்துவர்கள் தகவல்

மதுரை, செப்,19-

அனைவருக்கும் தரமான கண் மருத்துவச் சேவை கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 1976-ம் ஆண்டு தொடங்கப்பட்ட அரவிந்த் கண் பராமரிப்பு அமைப்பு, தனது 50 ஆண்டுகால சேவைப் பயணத்தை பொன்விழாவாகக் கொண்டாடுகிறது. இதையொட்டி மதுரையில் வரும் 20-ந்தேதி பொன்விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

அரவிந்த் கண் மருத்துவமனையின் நிறுவனர் தலைவர் டாக்டர் ஜி. வெங்கடசாமியின் தொலைநோக்குப் பார்வையில் தொடங்கிய அரவிந்த் அமைப்பு, கடந்த 5 தசாப்தங்களில் கண் மருத்துவச் சேவை, கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குறிப்பிடத்தக்க அளவில் விரிவடைந்துள்ளது.

இதுகுறித்து அரவிந்த் கண் பராமரிப்பு அமைப்பின் தலைவர் மற்றும் இயக்குநர்-தரம் டாக்டர் ஆர்.டி. ரவீந்திரன், கௌரவ இயக்குநர் டாக்டர் ஜி. நாச்சியார், இயக்குநர்-செயல்பாடுகள் மற்றும் LAICO-வின் நிர்வாக இயக்குநர் எமரிட்டஸ் துளசிராஜ் ரவில்லா, இயக்குநர்-உறைவிடப் பயிற்சி மற்றும் இயக்குநர்-



நிதி டாக்டர் ஆர். கிம் ஆகியோர் கூறியதாவது:

11 படுக்கைகளுடன் தொடங்கிய அரவிந்த் கண் மருத்துவ சேவை, தற்போது 16 மருத்துவமனைகள், 120 பார்வை மையங்கள் மற்றும் 8 சமூகக் கண் மருத்துவ மையங்களுடன் செயல்பட்டு வருகிறது. பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் அனைவரும் சிகிச்சை பெறும் வகையில், பாதிக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு இலவசமாகவோ அல்லது மானிய விலையிலோ சிகிச்சை வழங்கப்படுகிறது.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான புள்ளிவிவரங்களின்படி, அரவிந்த் கண் மருத்துவமனைகள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 9.07 கோடி வெளிநோயாளர் வருகைகளும், 1.16 கோடி கண் அறுவை சிகிச்சைகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆண்டுதோறும் 3,000-க்கும் மேற்பட்ட இலவச கண் பரிசோதனை முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

குழந்தைகளின் பார்வையில் அதிகரிக்கும் சிக்கல் தற்போதைய காலகட்டத்தில் குழந்தைகளின் பார்வை ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தைகள் பள்ளி நேரத்திற்கு வெளியே போதிய அளவில் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடாமல் இருப்பதும், சூரிய ஒளியில் செலவிடும் நேரம் குறைவதும் பார்வை தொடர்பான பிரச்சினைகளுக்கு காரணமாக இருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

தற்போது சுமார் 14 சதவீத குழந்தைகள் கண்ணாடி அணியும் நிலைக்கு வந்துள்ளதாகவும், இதே நிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை 50 சதவீதம் வரை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே குழந்தைகள் படிப்புடன் மட்டுமின்றி, தினசரி போதிய நேரம் வெளிப்புற விளையாட்டுகளில் ஈடுபடுவதற்கும் பெற்றோர்களும் பள்ளிகளும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மருத்துவர்கள் வலியுறுத்தினர்.

கண் மருத்துவச் சேவையுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கும் அரவிந்த் முக்கியத்துவம் அளித்து வருகிறது. கண் மருத்துவர்களுக்கான பயிற்சி, செவிலியர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கான திறன் மேம்பாடு, கண் வங்கி சேவை உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறைந்த செலவில் தரமான கண் மருத்துவப் பொருட்களை தயாரிக்கும் பணியிலும் அரவிந்த் அமைப்பு பங்காற்றி வருகிறது. அதன் ஒரு பகுதியாக செயல்படும் Aurolab மூலம் தயாரிக்கப்படும் கண் மருத்துவப் பொருட்கள் உலகின் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், LAICO மூலம் இந்தியா மட்டுமின்றி உலகின் பல்வேறு நாடுகளில் உள்ள கண் மருத்துவ நிறுவனங்களுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

11 படுக்கைகளுடன் தொடங்கிய அரவிந்த் அமைப்பு, 50 ஆண்டுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு கண் மருத்துவச் சேவை வழங்கும் அளவுக்கு வளர்ந்துள்ளது. இந்த பொன்விழா கடந்த கால சேவையை நினைவுகூரும் நிகழ்வாக மட்டுமின்றி, எதிர்காலத்தில் இன்னும் அதிகமான மக்களுக்கு தரமான கண் மருத்துவச் சேவையை கொண்டு சேர்ப்பதற்கான புதிய தொடக்கமாக அமையும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# மதுரையில் சிவகங்கை மாவட்ட ஆசிரியர்களுக்கு காலநிலை மாற்றம் குறித்த 3 நாள் பயிற்சி பட்டறை





சிவகங்கை, செப்.19-

மதுரை மாவட்டம் நாகமலை புதுக்கோட்டையில் உள்ள பில்லர் சென்டர் பல்லோட்டின் கூட்டரங்கில், சிவகங்கை மாவட்ட ஆசிரியர்களுக்கான காலநிலை மாற்றம் குறித்த மூன்று நாள் பயிற்சி பட்டறை சிவகங்கை மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிவகங்கை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலதண்டாயுதபாணி தலைமை வகித்து உரையாற்றினார். தேசிய பசுமைப்படையின் சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ வரவேற்றார். கருத்தாளர் ஜியோ டாமின் பயிற்சியின் நோக்கம் குறித்து எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

சிவகங்கை மாவட்ட வனத்துறை சரக அலுவலர்கள் பார்த்திபன், மனோ ரஞ்சிதம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தேசிய பசுமைப்படை மாநில திட்ட அலுவலர் அனிஷா கருத்துரையாற்றினார்.

கருத்தாளர்கள் லோகேஷ், அருண் பாண்டியன், பாலமுருகன் மற்றும் பசுமைத் தோழர் ஷர்மிளா ஆகியோர் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை செயல்பாடுகள் தொடர்பான பல்வேறு கருத்துகளை ஆசிரியர்களுக்கு எடுத்துரைத்தனர்.

வி.புதூர் தலைமையாசிரியர் வீரப்பன் நன்றி கூறினார். பயிற்சி பட்டறையின் ஒருங்கிணைப்புப் பணிகளை தலைமையாசிரியர்கள் ராஜேந்திரன், இன்பசேகர், சுப்பிரமணியன், சம்பத், புகழேந்தி மற்றும் ஆசிரியர் சிங்காரவேலன் மேற்கொண்டனர்.

மேலும், முதுகலை ஆசிரியர் ஜான் குழந்தை, ஆகியோர் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர். பயிற்சி பட்டறையில் 120-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் ப.சிதம்பரம் 81-வது பிறந்தநாள் விழா; காங்கிரஸ் நிர்வாகிகள் கொண்டாட்டம்





சிவகங்கை, செப்.19-

சிவகங்கையில் முன்னாள் மத்திய அமைச்சரும், மாநிலங்களவை உறுப்பினரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரத்தின் 81-வது பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை நகரில் காங்கிரஸ் நிர்வாகிகள் சார்பில் அன்னதானம் மற்றும் இனிப்பு வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ப.சிதம்பரம் தற்போது தமிழ்நாட்டிலிருந்து காங்கிரஸ் சார்பில் மாநிலங்களவை உறுப்பினராக உள்ளார்.

சிவகங்கை நகரத் தலைவரும் நகர்மன்ற உறுப்பினருமான விஜயகுமார் ஏற்பாட்டில், சிவகங்கை சிவன் கோவிலில் சுமார் 50 பேருக்கு அறுசுவை சைவ உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் காங்கிரஸ் தலைமைப் பொதுக்குழு உறுப்பினரும், வீரமங்கை வேலுநாச்சியார் அரிமா சங்கத்தின் பட்டயத் தலைவருமான அரிமா வித்யா கணபதி, மாவட்ட துணைத் தலைவர் சண்முகராஜன், மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவியும் முன்னாள் மாவட்ட கவுன்சிலருமான ஆரோக்கிய சாந்தாராணி, வட்டாரத் தலைவர்கள் கரும்பாவூர் உடையார், காளையார்கோவில் மதியழகன், காளிமுத்து, நாமனூர் முருகானந்தம், சேவியர் அருள்தாஸ், நாலுகோட்டை கருப்பையா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதேபோல், சிவகங்கை நகரப் பேருந்து நிலையத்தில் காங்கிரஸ் பிரமுகர் லெட்சுமணன் ஏற்பாட்டில் பொதுமக்கள், பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இதில் காங்கிரஸ் மூத்த முன்னோடிகள் வெள்ளைச்சாமி, குமரன் மெஸ் சிதம்பரம், வட்டாரத் தலைவர்கள் காளையார்கோவில் மதியழகன், கரும்பாவூர் உடையார், ஆரோக்கிய சாந்தாராணி, நாமனூர் முருகானந்தம், முருகன், மகாலிங்கம், கீழக்குளம் ரவிச்சந்திரன், சந்துரு, காளிமுத்து, நாலுகோட்டை கருப்பையா, விக்னேஷ் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



# த.வெ.க.,வினர் தந்தை பெரியார் பிறந்தநாள்: மாலை அணிவித்து மரியாதை

சிவகங்கை, செப்.19-

தந்தை பெரியாரின் பிறந்தநாளையொட்டி, சிவகங்கையில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். 2026 செப்டம்பர் 17 பெரியாரின் 148-வது பிறந்தநாள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் தலைமையிலும், சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக செயலாளர் எஸ். முத்துபாரதி முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில், கட்சி நிர்வாகிகள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட இணைச் செயலாளர் காளையார்கோவில் காளீஸ்வரன், மாவட்ட பொருளாளர் கண்ணதாசன், நகரச் செயலாளர் தளபதி கோபி, ஒன்றியச் செயலாளர்கள் தினேஷ்கர்ணன், பில்லத்திக் கண்ணன், ஆரோக்கியராஜா, மதன், மாவட்ட அணி நிர்வாகிகள் தினேஷ், தமராக்கி பிரபு, வழக்கறிஞரணி சூரக்குளம் சுரேஷ், கண்டாங்கிபட்டி பாலா, நகர் இணைச் செயலாளர் கணேஷ்குமார், துணைச் செயலாளர் முத்துப்பாண்டி, டி.என்.டி. வெங்கடேஷ்துரை உள்ளிட்ட தவெக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**மான்பமை திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பத்தூர் மாவட்டம்**

**OS No.: 158/2016**

M. மேகநாதன்.

...மனுதாரர்/வாதி.

எதிர்

1. M. வீராசாமி.
2. M. சம்பத் @ சுப்பிரமணி. (இறந்துவிட்டார்)
3. தாமரைச்செல்வி.
4. சுமதி.
5. ரம்யா.
6. ஜீவா

எதிர்மனுதாரர்/ பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி அசல் வழக்கில் வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக உரிமை விளம்புகை கோரியும் நிரந்திர தடையுறுத்து கட்டளை கோரியும் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள தாவாவானது திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் பெரியகரம் அஞ்சல், பட்டாலம்மன் கோவில் தெருவில் வசிக்கும் சுமார் 47 வயதுள்ள காலம் சென்ற சம்பத் (எ) சுப்பிரமணி மனைவி D3.தாமரைச்செல்வி, திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் பெரியகரம் அஞ்சல், பட்டாலம்மன் கோவில் தெருவில் வசிக்கும் சுமார் 25 வயதுள்ள காலம் சென்ற சம்பத் (எ) சுப்பிரமணி மகளும் ஹரி மனைவியுமான D5.ரம்யா, திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் பெரியகரம் அஞ்சல், பட்டாலம்மன் கோவில் தெருவில் வசிக்கும் சுமார் 23 வயதுள்ள காலம் சென்ற சம்பத் (எ) சுப்பிரமணி மகன் D6.ஜீவா பிராதிவாதிகள் ஆஜருக்காக வேண்டி கனம் நீதிமன்றத்தில் 09.10.2026 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதி போரிக்கை குறித்து 3,5,6 பிரதிவாதிகளுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வருகிற 09.10.2026 அன்று மாண்புமிகு திருப்பத்தூர் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் காலை 10.00 மணியளவில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி ஆட்சேபனை தெரிவித்துக்கொள்ளலாம் என்றும் தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பு பிரப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

நீதிமன்ற உத்திரவுபடி.





## பெரியார் பிறந்தநாள்

# சிவகங்கை த.வெ.க., பிரமுகர் அரிமா கல்பனா சபேசன் மரியாதை

சிவகங்கை, செப்.19-

தந்தை பெரியாரின் பிறந்தநாளையொட்டி, சிவகங்கை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு தமிழக வெற்றிக் கழக பிரமுகரும் சமூக ஆர்வலருமான அரிமா கல்பனா சபேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னதாக, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குழந்தைராணி நாச்சியார் மற்றும் சிவகங்கை தெற்கு மாவட்ட தவெக செயலாளர் எஸ். முத்துபாரதி ஆகியோர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து உறுதிமொழி ஏற்றனர்.

அதனைத் தொடர்ந்து தவெக பிரமுகரும் சமூக ஆர்வலருமான அரிமா கல்பனா சபேசன், பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# மதுரையில் பொதுவிநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம்!

## குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் உள்ளிட்ட சேவைகளைப் பெறலாம்

மதுரை, செப்.19-

மதுரை மாவட்டத்தில் பொதுவிநியோகத் திட்டம் தொடர்பான மக்கள் குறைதீர் முகாம் (19.09.2026) இன்று நடைபெற உள்ளது.

மதுரை மாவட்ட குடிமைப்பொருள் வட்டாட்சியர் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களில் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இந்த முகாம் நடைபெறும்.

முகாமில் பொதுமக்கள் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தல், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், பெயர் திருத்தம், முகவரி மாற்றம், நகல் குடும்ப அட்டை கோருதல், கைப்பேசி எண் பதிவு மற்றும் மாற்றம் உள்ளிட்ட சேவைகளைப் பெறலாம்.

மேலும், தனியார் சந்தையில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பான புகார்கள், பொதுவிநியோகத் திட்டம் சார்ந்த இதர குறைகள் குறித்த மனுக்களையும் பொதுமக்கள் நேரடியாக முகாம் அலுவலர்களிடம் அளித்து தீர்வு பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, பொதுமக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு மதுரை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ராஜகுரு தெரிவித்துள்ளார்.

# 65 ஆயிரம் காலிப்பணியிடங்களை நிரப்பக் கோரி மின்வாரிய ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்



சிவகங்கை, செப்.19-

சிவகங்கையில் தமிழ்நாடு மின்வாரிய ஊழியர்கள் கூட்டமைப்பு (TNEB Employees Federation) தொழிற்சங்கம் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சிவகங்கை மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலக நுழைவாயில் முன்பு நடைபெற்ற கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு திட்டத் தலைவர் வி. சாத்தையா தலைமை வகித்தார். செயல்தலைவர் கே.என். காளிமுத்தன், திட்டப் பொருளாளர் கே. ஆனந்தசெல்வம், மாநில இணைச் செயலாளர் எஸ். செல்லப்பன், அமைப்புச் செயலாளர் எஸ். காஜாமுகைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிவகங்கை திட்டச் செயலாளர் கே.ஆர்.கே. சுப்பிரமணியன் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினார்.

மின்வாரியத்தில் உள்ள 65 ஆயிரம் காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்; விடுபட்ட கேங்மேன் பணியாளர்கள் தொடர்பான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்; ஒப்பந்தப் பணிகளுக்கு ஐடிஐ படித்தவர்களை நியமிக்க வேண்டும்; மின்வாரியத்தில் தனியார்மய நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும்; அனைவருக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை வழங்க வேண்டும்; 9,613 கேங்மேன் பணியாளர்களை கள உதவியாளர்களாக வகைமாற்றம் செய்ய வேண்டும்; மாறுதல் உத்தரவு பெற்ற கேங்மேன் பணியாளர்களை உடனடியாக பணிவிடுவிப்பு செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

இதில் மின்வாரிய ஊழியர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். இணைச் செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161